1978 பிப்ரவரி 28]

பணகுடி அனுமான் ஆற்றுப்பாலம்

* 315 வினா : திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசீய நெடுஞ்சாலை எண் 7-ல் உள்ள நெல்லை—நாகர்கோயில் சாலை 0·56 கி.மீ. உள்ள பணகுடி—அனுமான் ஆற்றுப்பாலம் அகலப்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் இருந்து கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இத் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் உள்ள நெல்லை—நாகர்கோயில் சாலையில் உள்ள பணகுடி—அனுமான் ஆற்றுப்பாலத்தை அகலப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பாலத்தை அகலப்படுத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தற்போது மதுரை-கன்னியாகுமரி சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் உள்ள பணகுடி மாற்று வழிச்சாலை அகலப்படுத்தும் திட்டம் ஆகியவைகளுக்கு மத்திய அரசு அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளும் அழைக்கப்பட்டு வேலை தொடங்கும் நிலையில் இருக்கிறது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அனுமதியுடன் மேலும் சில நிமிடங்கள் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : தற்போது பணகுடி நகருக்கு உள்ளேயிருந்து செல்கிற தேசிய நெடுஞ்சாலைக்கு ஒரு மாற்று வழிச்சாலை அமைக்கப்பட்டாலும் எல்லாப் போக்குவரத்துகளும் தற்போது அனுமான் ஆற்றுப்பாலம் வழியில் உள்ள பாலத்தை அதைக் கடந்து செல்வதால்—அந்தப் பாலம் குறுகலாக இருப்பதால்—அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் அந்தப் பாலத்தை அகலப்படுத்த ஏதாவது ஒரு தொகையில் இருந்து ஸ்டேட் ஹைவேஸ் பண்ட் அல்லது நேஷனல் ஹைவேஸ் பண்டிலிருந்து ஏதாவது தொகையை எடுத்து இந்தப் பாலத்தை அகலப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது அமைக்கப் படயிருக்கிற மாற்றுவழிச்சாலை மத்திய அரசு நிதியில் இருந்து தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் மேற்கொள்ளப் பட இருக்கிறது. அந்த மாற்றுவழிச்சாலையை தேசீய நெடுஞ் சாலைப் பிரிவு ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்கெனவே இருந்த பாலம் மாநில அரசுக்கு உட்பட்டு வந்துவிடும். பிறகு அந்தப் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி யோசிக்கலாம்.

பட்டனப்பாக்கத்தில் கடல் அரிப்பு

*316 வினா: திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : திரு. எஸ். கணேசன் :

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் பட்டினப்பாக்கம் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் அகில இந்திய வானொலி யையும் ஓசியானிக் ஓட்டலையும் இணைக்குமிடத்தில் கடற்கரை சாலையில் ஆகஸ்டு 1977-ல் சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்துவிட்டது. இக்கடல் அரிப்பு நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் உடனே துரிதகதியில் கவனிக்கப்பட்டு ரூபாய் 1.23 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப் பட்டுவிட்டது. அக்டோபர் 1977-ல் பெய்த பெருமழையின் காரணமாக இச்சாலையில் மீண்டும் கடல் அரிப்பு ஏற்பட்டது. இதனைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறி யாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : இந்த கடல் அரிப்பை பழுதுபார்ப்பதாகச் சொல்கிறார்கள். கடலரிப்பைத் தடுக்க கற்களைப் போடுவதா ? அந்தச் சாலை இரண்டு முறை பழுத டைந்துவிட்டது. எனவே அந்தச் சாலையை நல்ல முறையில் மீண்டும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா ? மேலும் மாற்றுச்சாலையில் உள்ள மின்சார விளக்குகள் பல மாதங்களாக எரியவில்லை, அதை எரியச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 7.7 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பகுதியை மீண்டும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மின் விளக்குகள் எரியவும் நடவடிக்கை எடுக்கப்படும்.